
**டிசம்பர் – 13**

# TNPSC துளிகள்

- சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான புவி வாகையர் விருதை வென்றுள்ளார்.
- யூடியூப்பின் இந்திய-அமெரிக்கத தலைமை நிர்வாக அதிகாரி நீல் மோகன், டைம் இதழின் 2025 ஆம் ஆண்டின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரியாக அறிவிக்கப் பட்டு உள்ளார்.
- இந்திய அஞ்சல் துறையானது, கோட்டயத்தில் உள்ள CMS கல்லூரியில் கேரளாவின் முதல் Gen-Z அஞ்சல் அலுவலக விரிவாக்க முனையத்தினைத் திறந்துள்ளது.
- இந்தியா தனது முதல் மெகாவாட்-மணிநேர (MWh) அளவீட்டில் வெனடியம் ரெடாக்ஸ் ஃப்ளோ பேட்டரி (VRFB) எனும் மின் கல அமைப்பினை உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் திறந்து வைத்தது.
- மூன்று வயது இந்தியச் சிறுவன் சர்வாக்யா சிங் குஷ்வாஹா 2025 ஆம் ஆண்டில் உலகின் இளம் FIDE-மதிப்பீடு பெற்ற சதுரங்க வீரரானார்.
- பிரக்ஞானந்தா ரமேஷ்பாபு FIDE சர்க்யூட் 2025 போட்டியில் வென்று, சைப்ரஸில் நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டிக்கான இடத்தைப் பிடித்தார்.
- குமாவோன் இமயமலையில் உத்தரக்காண்ட் மாநிலத்தில் சுந்தர்துங்கா பனிப்பாறை பள்ளத்தாக்கில், சுமார் 10,000 அடி உயரத்தில் ஒரு வங்காளப் புலி தென்பட்டது.
- பம்பாயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள புதுமை மற்றும் தொழில் முனைவோர் சங்கம் (SINE) ஆனது 250 கோடி ரூபாயுடன் இந்தியாவின் முதல் தொழிற்காப்புடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்பப் புதுமைக்கான துணிகர மூலதன நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாலிவுட் நடிகை ரவீனா டாண்டன் விலங்கு உரிமைகள் மற்றும் வனவிலங்குப பாதுகாப்புக்கான தனது அர்ப்பணிப்புக்காக PETA இந்தியாவின் 2025 ஆம் ஆண்டின் சிறந்த நபராகப பெயரிடப்பட்டார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) கடவுச் சீட்டானது, 184 இடங்களுக்கு பயணம் மேற் கொள்ளும் வசதியுடன் 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் 8வது வலிமையான கடவுச் சீட்டாக பெயரிடப்பட்டுள்ளது.
  - 2015 ஆம் ஆண்டில் 42வது இடத்திலிருந்த ஐக்கிய அரபு அமீரகத்தின் கடவுச் சீட்டானது 2025 ஆம் ஆண்டில் 8 வது இடத்திற்கு உயர்ந்தது.
- ஹின்டர்லேண்ட் ப்ரூ நடவடிக்கை கீழ் மகாராஷ்டிராவின் வார்தாவில் ஒரு சட்ட விரோத மெபெட்ரோன் உற்பத்தி அலகினை DRI (வருவாய்ப புலனாய்வு இயக்குநரகம்) கண்டுபிடித்துள்ளது.
  - மெபெட்ரோன் என்பது வேதியியல் ரீதியாக 4-MMC (4-மெத்தில்மெத்காத்தினோன்) என்று அழைக்கப்படும் ஒரு செயற்கை ஊக்க மருந்து ஆகும்.
- ஆஸ்ட்ராஜெனெகா பார்மா இந்தியா மற்றும் சன் பார்மாசூட்டிகல் இண்டஸ்ட்ரீஸ் ஆகியவை இந்தியாவில் சோடியம் சிர்கோனியம் சைக்ளோசிலிகேட் (SZC) மருந்தினை சந்தைப்படுத்த கூட்டு சேர்ந்துள்ளன.
  - மிகவும் நாள்பட்ட சிறுநீரக நோய் மற்றும் இருதயச செயலிழப்பு நோயாளிகளில் ஹைபர்கலேமியாவை (அதிகப்படியான பொட்டாசியம்) நிர்வகிக்க SZC பயன்படுத்தப் படுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் வாக்குச் சாவடிகள்




- மறுசீரமைப்புச் செயல்முறைக்குப் பிறகு தமிழ்நாட்டில் மொத்தம் 75,035 வாக்குச் சாவடிகள் உள்ளன.
- இது முந்தைய 68,467 நிலையங்களிலிருந்து 6,568 அதிகரிப்பு ஆகும்.
- மறுசீரமைப்பு செயல்முறைக்குப் பிறகு, மொத்தம் 6,648 நிலையங்கள் உருவாக்கப் பட்டு, 80 நிலையங்கள் இணைக்கப்பட்டன.
- 2,509 வாக்குச் சாவடிகளுக்கான இடம் மாற்றப்பட்டாலும், சுமார் 7,752 இடங்களில் அந்தப் பிரிவுகளின் மறுசீரமைப்பு மேற்கொள்ளப் பட்டது.
- ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்பதோடு மேலும், ஒரு வாக்குச்சாவடி இரண்டு கிலோமீட்டர் சுற்றளவில் இருக்க வேண்டும்.
- காவல் நிலையங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் அல்லது சமயம் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் எந்த ஒரு வாக்குச்சாவடியும் நிர்ணயிக்கப் பட வில்லை.


## உலகளாவிய AI மாநாடு 2025



- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், மதராஸ் மற்றும் இந்தியா AI திட்டம் ஆகியவை சென்னையில் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) மாநாட்டை நடத்த உள்ளன.
- இந்த நிகழ்வானது, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் உள்ளடக்கியச செயற்கை நுண்ணறிவை (AI) ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநாடு ஆனது AI பாதுகாப்பு, நிர்வாகக் கட்டமைப்புகள் மற்றும் உலகின் தெற்கு நாடுகளுக்கான AI பாதுகாப்பு பொது கருத்தாக்கம் பற்றி விவாதித்தது.
- இந்த மாநாடு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 முதல் 20 ஆம் தேதி வரை புது டெல்லியில் திட்டமிடப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டு இந்தியா-AI தாக்க உச்சி மாநாட்டிற்கான ஆயத்த நிகழ்வாக செயல்படுகிறது.
- உலகளவில் ஒன்றோடொன்று ஒருங்கி இயங்கக் கூடிய, ஆனால் இந்தியாவின் சமூக மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்கு ஏற்ற AI அமைப்புகளை உருவாக்குவதே இதன் குறிக்கோள் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் திட்டம் 2.0




- 2025–29 ஆம் ஆண்டிற்கான தேசிய நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத் திறன் திட்டத்தின் (NAP-AMR 2.0) இரண்டாவது கட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் தனியார் துறையை ஈடுபடுத்துவதன் மூலமும் தொற்றுக் கட்டுப்பாட்டு அமைப்புகளை மேம்படுத்துவதன் மூலமும் முந்தைய கட்டத்தில் உள்ள பல்வேறு இடைவெளிகளை நிவர்த்தி செய்கிறது.
- இது துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், ஆய்வகத் திறனை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த AMR உரிமையை உறுதி செய்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் (AMR) என்பது அறுவை சிகிச்சைகள், புற்று நோய்ப பராமரிப்பு மற்றும் முக்கியமான சுகாதாரச சேவைகளைப் பாதிக்கும் ஒரு பெரிய பொது சுகாதார அச்சுறுத்தலாகும்.
- AMR ஆனது சிகிச்சையில் தாமதங்களை அதிகரிக்கிறது, எதிர்ப்புத திறன் கொண்ட நுண்ணுயிரிகளைப் பரப்புகிறது மற்றும் குடும்பங்கள் மற்றும் சமூகத்திற்கான சுகாதாரச் செலவுகளை அதிகரிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## BRICS டிஜிட்டல் வர்த்தக நாணயம் - The Unit




- The Unit என்பது BRICS நாடுகளின் உறுப்பினர்களின் முறைசாரா ஆதரவுடன் IRIAS (மேம்பட்ட அமைப்புகளுக்கான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம்) உருவாக்கிய ஒரு சோதனை முறையிலான டிஜிட்டல் வழி பணம் செலுத்துவதற்கான நாணயமாகும்.
- இது BRICS நாடுகளின் பன்னாட்டு வர்த்தகத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற நிலையில் மேலும் இது 40% தங்கம் மற்றும் 60% BRICS நாடுகளின் நாணய தளத்தினால் ஆதரிக்கப் படுகிறது.
- பரிவர்த்தனைகள் ஆனது அனுமதிக்கப்பட்ட கார்டானோ தொடர்ச சங்கிலி நுட்பத்தில் இயங்குகின்றன என்ற நிலையில் இது பாதுகாப்பான மற்றும் ஒரு வெளிப்படையான பணம் செலுத்தல்களை உறுதி செய்கிறது.
- இது அமெரிக்க டாலரைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, உலகின் தெற்கு நாடுகளுக்கு ஒரு நடுநிலையான, நிலையான வர்த்தக-தீர்வு விருப்பத்தை உருவாக்குவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தேசிய நாணயங்களுக்கு மாற்றாக அல்ல, ஆனால் BRICS நாடுகளுக்குள் சர்வதேச வர்த்தக கொடுப்பனவுகளை ஆதரிப்பதற்காக மட்டுமே ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்


## 'உங்கள் பணம், உங்கள் உரிமை' பிரச்சாரம்

- குடிமக்கள் உரிமை கோரப்படாத நிதிச் சொத்துக்களை கோர உதவுவதற்காக இந்திய அரசு "உங்கள் பணம், உங்கள் உரிமை" பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரம் Awareness, Accessibility and Action (விழிப்புணர்வு, அணுகல் மற்றும் நடவடிக்கை) என்ற 3A கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 477 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான முகாம்கள் நடத்தப்பட்டன.
- இந்த இயக்கம் உரிமை கோரப்படாத வங்கி வைப்புத் தொகை, காப்பீடு, ஊதியப் பங்கு, பங்குகள், பரஸ்பர நிதிகள் மற்றும் ஓய்வூதியத் தொகைகளை உள்ளடக்கியது.
- உரிமை கோரப்படாத வங்கி வைப்புத் தொகைகளுக்கு ரிசர்வ் வங்கியின் UDGAM, உரிமை கோரப்படாத காப்பீட்டுத் தொகைகளுக்கு IRDAIன் பீமா பரோசா மற்றும்

உரிமை கோரப்படாத பரஸ்பர நிதிகளுக்கு SEBIன் MITRA போன்ற தற்போதைய தளங்கள், குடிமக்கள் தங்கள் உரிமை கோரப்படாதச் சொத்துக்களை மிகவும் திறமையாகக் கண்டறிய அதிகாரம் அளித்துள்ளன.




## வங்கிக் குழு மறுசீரமைப்பு விதிமுறைகள் – RBI




- 2025 ஆம் ஆண்டில் வணிக வங்கிகளின் நிதிச் சேவை நடவடிக்கைகள் குறித்த இறுதி வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்டது.
- வங்கிக் குழுக்கள், கட்டாய மறுசீரமைப்பைத் தவிர்த்து, தற்போது வாரிய ஒப்புதலுடன் கடன் நடவடிக்கைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து தொடர அனுமதிக்கப்படுகின்றன.
- சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்களில் (ARCs) வங்கிக் குழு பங்குதாரர்களின் 20% உச்ச வரம்பு தக்க வைக்கப் பட்டுள்ளது.
- வங்கிக் குழுக்களுக்குள் வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கான (NBFCs) உயர் அடுக்கு ஒழுங்குமுறை விதிமுறைகள் 2028 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் இணங்க வேண்டும்.
- வழிகாட்டுதல்கள் ஆனது வங்கிகள், NBFC மற்றும் வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் (HFCs) ஆகியவற்றில் ஆபத்து விதிமுறைகளைச் சீரமைப்பதன் மூலம் இணக்கம் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துகின்றன என்ற நிலையில் இது ஒழுங்குமுறை நடுவர் இடையீட்டினைத் தடுக்கிறது.

### இந்திய ரிசர்வ் வங்கியின் 5 பில்லியன் டாலர் மதிப்பிலான பரிமாற்றம்

- ரூபாய் மதிப்பினை மேலாண்மை செய்வதற்காக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது 5 பில்லியன் டாலர் மதிப்பிலான வாங்குதல்-விற்பனை பரிமாற்றத்தை அறிவித்தது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு டாலருக்கான ரூபாயின் மதிப்பு 90 என்பதைத் தாண்டியது.
- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் தேதி நிலவரப்படி 686.23 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- இந்த பரிமாற்றம் ஆனது இந்திய ரிசர்வ் வங்கி தற்போது டாலர்களை வாங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றை விற்கும் என்பதாகும்.
- இந்த நடவடிக்கையானது இந்திய ரிசர்வ் வங்கி அந்நியச் செலாவணி இருப்புகளைக் குறைக்காமல் ரூபாய் மதிப்பினை ஆதரிக்க உதவுகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### எரிபொருள் கலப்படத்தினைக் கண்டறிதல் – PSOG

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது பல்வேறு கூறுகளை தேர்ந்தெடுத்துப் பிரிக்கும் கரிமக் கூழ்ம உருவாக்கக் காரணி/ஆர்கனோஜெலேட்டர் (PSOG) என்ற பொருளை உருவாக்கியது.
- PSOG ஆனது பெட்ரோலில் கலந்த மண்ணெண்ணெய்யைக் கண்டறிய உதவுகிறது, மேலும் தண்ணீரில் இருந்து எண்ணெய் கசிவுகளை நீக்குகிறது.
- இது எண்ணெயை எளிதில் சேகரிக்கக்கூடிய ஒரு திடக் கூழ்மம் ஆக / ஜெல்லாக மாற்றுகிறது.
- அதி மூலக்கூறு சுய ஒருங்கிணைவு மூலம் செயல்படுகின்ற PSOG, எண்ணெய்களுக்கான தொடர்பு கொள்ளும் தன்மையை அளிக்கிறது.
- இது எரிபொருள் பாதுகாப்பு மற்றும் எண்ணெய்-கசிவுகளை சுத்தம் செய்வதற்கான குறைந்த விலையிலான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையை வழங்குகிறது.




## TMC BART பரிசோதனை




- டாடா மெமோரியல் சென்டர் (TMC) மையத்தின் ஆராய்ச்சியாளர்கள், சிறுநீர்ப்பை கூடுதல் கதிரியக்க சிகிச்சை (BART) சோதனையில், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய கதிர்வீச்சு சிகிச்சையானது அதிக ஆபத்துள்ள சிறுநீர்ப் பை புற்றுநோய் கொண்ட நோயாளிகளில் இடுப்பு பகுதியில் மீண்டும் பாதிப்பு ஏற்படுவதைக் கணிசமாகக் குறைக்கிறது என்பதைக் காட்டியது.
- 2016 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட BART சோதனை, 150க்கும் மேற்பட்ட நோயாளிகளில் மேற்கொள்ளப்பட்டது.
- தீவிர சிஸ்டெக்டோமி சிகிச்சையை (சிறுநீர்ப் பையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுதல்) தொடர்ந்து தசையில் ஊடுருவும் சிறுநீர்ப்பை புற்றுநோய் (MIBC) மீது இந்த ஆய்வு கவனம் செலுத்தியது.
- கதிர்வீச்சு சிகிச்சை ஆனது இடுப்புப் பகுதியில் புற்றுநோய் மீண்டும் வருவதை 25

சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைத்தது.

- தீவிர நவீன கதிர்வீச்சு சிகிச்சை (IMRT) போன்ற நவீன துல்லிய நுட்பங்கள், பக்க விளைவுகளைக் குறைத்தன.
- மேம்பட்ட நிலையிலான புற்றுநோய்க் கட்டி நிலைகள், நிணநீர் முனை உருவாக்கம் அல்லது அறுவை சிகிச்சை செய்யப்படட பகுதிகளில் கட்டி உருவாக்கம் கொண்ட அதிக ஆபத்துள்ள நோயாளிகள் இதன் மூலம் பயன் பெற்றனர்.

## விகாஸ் எஞ்சின்





- கோத்ரேஜ் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது, ககன்யான் திட்டத்திற்காக முதல் மனித பயணப் பயன்பாட்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட விகாஸ் எஞ்சினை இஸ்ரோவிற்கு வழங்கியது.
- இந்த எஞ்சின் இந்தியாவின் முதல் மனிதர்கள் மேற்கொள்ளும் விண்வெளிப் பயணத்திற்கான ஏவு வாகனமான LVM-3 ஏவு கலத்தின் L110 நிலைக்கு ஆற்றல் அளிக்கும்.
- மனித பயணப் பயன்பாட்டிற்கான மதிப்பீடு ஆனது விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்வதற்கான மேம்பட்ட பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்கிறது.
- ககன்யான் மூன்று இந்திய விண்வெளி வீரர்களை மூன்று நாட்கள் வரை புவி தாழ் மட்ட சுற்றுப்பாதையில் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோத்ரேஜ் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது முன்பு PSLV, GSLV, LVM-3, மற்றும் சந்திரயான் மற்றும் மங்கள்யான் பயணங்களுக்கான கூறுகளுக்கான எஞ்சின்களைப் பங்களித்து

உள்ளது.

## சந்திரனில் இரும்பு ஆக்சைடு

- சீனாவின் சாங்-6 கலம் சந்திர மண்ணில் சிறிய இரும்பு ஆக்சைடு படிகங்களைக் கண்டுபிடித்தது.
- தென் துருவத்திலுள்ள ஐட்கன் படுகையிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் ஹெமடைட் மற்றும் மாக்ஹமைட் கண்டறியப்பட்டன.
- இந்தப் படுகை சூரிய மண்டலத்தில் உள்ள பழமையான மற்றும் மிகப்பெரிய அறியப் பட்ட மோதல் மண்டலமாகும்.
- இரும்பு ஆக்சைடு உருவாக்கம் மாபெரும் பழங்கால மோதல்/தாக்கங்களிலிருந்து வெளியான ஆக்ஸிஜன் நிறைந்த நீராவியுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- Chang'e-6 கலமானது 2024 ஆம் ஆண்டில் நிலவின் உள்ளார்ந்தப் பிராந்திய சந்திர மாதிரிகளைப் புவிக்கு அனுப்பியது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## CITES உடன்படிக்கையின் 50 ஆம் ஆண்டு நிறைவு


- CITES ஆனது உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற, முக்கிய புதிய இனங்களின் பாதுகாப்பு குறித்த முடிவுகள் ஏற்றுக் கொள்ளப் பட்ட CoP20 மாநாட்டில் அதன் 50 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- CITES (அழிந்துவரும் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் குறித்த உடன்படிக்கை) என்பது உயிரினங்களைப் பாதுகாக்க வனவிலங்கு

வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் ஓர் உலகளாவிய ஒப்பந்தமாகும்.

- 1963 ஆம் ஆண்டில் IUCN அமைப்பினால் உருவாக்கப்பட்ட இது, 1973 ஆம் ஆண்டில் கையெழுத்தாகி, 1975 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தம் 185 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது (2025 ஆம் ஆண்டு நிலவரப் படி) மற்றும் வர்த்தக நிலைகளைக் கட்டுப்படுத்த மூன்று பின் இணைப்புகளைப் பயன்படுத்துகிறது.
- CoP20 ஆனது, முதலாம் பின் இணைப்பில் சுறாக்கள், திருக்கை மீன்கள், கேலபோகஸ் உடும்புகள் மற்றும் ஆப்பிரிக்க ஊர்வன இனங்கள் உள்ளிட்ட 77 இனங்களைத் தன் பின்னிணைப்புகளில் சேர்த்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய சுற்றுச்சூழல் கண்ணோட்ட அறிக்கை 2025




- நைரோபியில் நடைபெற்ற 7வது UNEP அமர்வின் போது UNEP ஆது 7வது உலகளாவிய சுற்றுச்சூழல் கண்ணோட்ட அறிக்கையை வெளியிட்டது.
- பசுமை இல்ல வாயு உமிழ்வானது தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், 2024 ஆம் ஆண்டில் உலகம் 1.55°C வெப்பமயமாதலை எட்டியதாகவும் அறிக்கை கூறுகிறது.
- ஒரு மில்லியன் இனங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன என்ற நிலையில்

மேலும் 40% வரை நிலம் தரமிழந்து வருகிறது.

- ❖ பருவநிலைப் பேரழிவுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 143 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவாகிறது என்ற நிலையில் மாசுபாடு 9 மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது.
- ❖ உலகில் 8,000 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் உள்ளன இதனால் கடுமையான சுகாதாரம் மற்றும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன.
- ❖ 1972 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட UNEP ஆனது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான முக்கிய உலகளாவிய அமைப்பாகும்.

# முக்கிய தினங்கள்

## மனித உரிமைகள் தினம் 2025 - டிசம்பர் 10

- ❖ அனைத்து மக்களும் சுதந்திரமாகவும், சமமாகவும், கண்ணியத்திற்கும் நீதிக்கும் தகுதியானவர்கள் என்பதை அனைவருக்கும் நினைவூட்டுவதே இந்த நாளின் நோக்கம் ஆகும்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் (UDHR) 1948 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- ❖ 1950 ஆம் ஆண்டில், ஐ.நா. சபையானது இந்த நாளைக் கொண்டாடவும் மனித உரிமைகள் கல்வியை ஊக்குவிக்கவும் வேண்டி அனைத்து நாடுகளுக்கும் முறையாக அழைப்பு விடுத்தது.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Our Everyday Essentials" என்பதாகும்.
- ❖ UDHR என்பது உலகில் மிகவும் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது பல தேசிய சட்டங்கள் மற்றும் உரிமைகள் இயக்கங்களுக்கு உத்வேகம் அளித்துள்ளது.




# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோ பாரம்பரியப் பட்டியல் 2025 – தீபாவளி

- ❖ இந்தியாவின் தீபங்களின் திருவிழாவான தீபாவளியானது 2025 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- ❖ பண்டிகைகள், சடங்குகள், கலைகள் மற்றும் சமூக நடைமுறைகள் போன்ற உயிர்ப்புள்ள கலாச்சார மரபுகளைப் பாதுகாப்பதே இந்தப் பட்டியலின் நோக்கமாகும்.


- தீபாவளி ஆனது அதன் நீண்டகாலச் சடங்குகள், சமூக கொண்டாட்டங்கள், பாரம்பரிய கைவினைப்பொருட்கள் மற்றும் தீபங்களை ஏற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு பட்டியலில் பைக்குழல் இசைக் கருவி/பேக் பைப் வாசித்தல் (பல்கேரியா), குவார்டெட்டோ இசை (அர்ஜென்டினா) மற்றும் கிறிஸ்துமஸ் பிராம் மற்றும் சம்பை (பெலிஸ்) போன்ற 20 கூறுகள் உள்ளன.
- இந்தியாவில் துர்கா பூஜை, கும்பமேளா, வேத மந்திரங்கள், இராம லீலை, குடியாட்டம் மற்றும் கல்பெலியா நடனம் ஆகியவை முன்னதாக இப்பட்டியலில் இடம் பெற்றன.




## யுனெஸ்கோ பாதுகாப்புப் பட்டியல் 2025 – போரீண்டோ

- யுனெஸ்கோ அமைப்பானது 2025 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் போரீண்டோ இசைக் கருவியை அவசரப் பாதுகாப்பு தேவைப்படும் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்த்தது.
- போரீண்டோ என்பது சிந்து சமவெளி நாகரிகத்தின் இசை மரபுகளுடன் தொடர்பு உடைய சிந்துவைச் சேர்ந்த ஒரு மட்பாண்டத்தினால் ஆன புல்லாங்குழல் ஆகும்.
- இது சுடுமண் பாண்டம் கொண்டு கைவினை பொருட்களின் மூலம் தயாரிக்கப்பட்டது என்ற ஒரு நிலையில் வட்டமான வெற்று உள்ளமைப்பினைக் கொண்ட இது மிகவும் மென்மையான, காற்று உள்ளீட்டு இசைத் தொனியை உருவாக்குகிறது.

- மொஹெஞ்சதாரோ மற்றும் ஹரப்பா போன்ற சில தொல்பொருள் தளங்கள் சிந்து சமவெளி நாகரிகத்தில் (கிமு 3300–1300) இதேபோன்ற களிமண் மற்றும் எலும்பிலான புல்லாங்குழல் இருந்ததைக் காட்டுகின்றன.




## யுனெஸ்கோ மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியல் 2025 - தங்காயில் சேலை




- வங்காளதேசத்தின் தங்காயில் என்ற நெசவு செய்யப் பட்ட சேலை 20வது குழு அமர்வின் போது யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.
- இந்த அங்கீகாரம், சிறப்பான கைத்தறி வேலைப்பாட்டிற்குப் பெயர் பெற்ற தங்காயில் மாவட்டத்தின் இரண்டு நூற்றாண்டு பழமையான நெசவுப் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுகிறது.
- மேற்கு வங்காளத்தில் புலம்பெயர்ந்த நெசவாளர்கள் நீண்டகாலமாக இந்த சேலையை

உற்பத்தி செய்வதைக் காரணம் காட்டி, 2024 ஆம் ஆண்டில் இந்தியா "வங்காளத்தின் தங்காயில் சேலைக்கு" புவிசார் குறியீடு வழங்கியது.

- சர்வதேச உடன்படிக்கையில் இந்த இரு நாடுகளும் பங்குதாரர்களாக இருப்பதால், யுனெஸ்கோ அங்கீகாரமும் இந்தியாவின் புவிசார் குறியீடும் ஒன்றோடொன்று முரண்படவில்லை என்று வங்காளதேசம் கூறியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★